



# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

“தேமதுரத் தமிழோசை உலகமெலாம்”






Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

| VOLUME : 01 | ISSUE: 283 | 06.04.2026 | MONDAY | PANGUNI: 23 | PRICE : RS.5/- |
|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 283 | 06.04.2026 | திங்கள்கிழமை | பங்குனி : 23 | விலை : ரூ.5/– |


## மீண்டும் என்டிஏ ஆட்சி அமைய தமிழகத்தின் பங்கு முக்கியம்

# “நிர்வாகிகளுக்கு மோடி வலியுறுத்தல்!”

சென்னை, ஏப்.6-

“மத்தியில் மீண்டும் என்டிஏ ஆட்சி அமைய தமிழகத்தின் பங்கு முக்கியம்" என பாஜக நிர்வாகிகளுக்கு பிரதமர் மோடி வலியுறுத்தினார்.

இரண்டு நாள் பயணமாகத் தமிழகம் வந்த பிரதமர் நரேந்திர மோடி, புதுச்சேரி பொதுக்கூட்டத்தை முடித்துவிட்டு நேற்று முன் தினம் இரவு சென்னை திரும்பினார். கிண்டியில் உள்ள நட்சத்திர ஹோட்டலில் தங்கிய அவர், நேற்று காலை பாஜக மையக்குழு கூட்டத்தை கூட்டினார். மத்திய அமைச்சர் பியூஷ் கோயல், நயினார் நாகேந்திரன், எல்.முருகன், அண்ணாமலை, தமிழிசை சவுந்தரராஜன் உள்ளிட்ட 18 முக்கிய நிர்வாகிகள் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றனர்.

இந்தக் கூட்டத்தில், பாஜக போட்டியிடும் 27 தொகுதிகளின் வெற்றி வாய்ப்புகள் மற்றும் கடந்த முறையை விட அதிக இடங்களில் வெல்வதற்கான வியூகங்கள் குறித்தும் விவாதிக்கப்பட்டது.



மேலும், தேர்தல் பிரச்சாரம், பொதுக்கூட்டங்கள், முக்கிய தலைவர்களின் பிரச்சாரப் பயணம் உள்ளிட்ட பணிகள் தொடர்பாகவும் ஆலோசிக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

அதேசமயம் "கட்சிக்குள் இருக்கும் கருத்து வேற்றுமைகளை அடியோடு மறந்துவிட்டு, வேட்பாளர்களின் வெற்றிக்காக அனைவரும் ஒற்றுமையுடன் பாடுபட வேண்டும். மத்தியில் மீண்டும் என்டிஏ ஆட்சி அமைய தமிழகத்தின் பங்கு முக்கியம்" என நிர்வாகிகளிடம் பிரதமர் மோடி திட்டவட்டமாகப் பேசியதாகக் கூறப்படுகிறது.

மேலும், வரும் 15ம் தேதி கன்னியாகுமரியில் மோடி மேற்கொள்ள இருக்கும் தேர்தல் பிரச்சாரம் குறித்தும், அடுத்தடுத்து தமிழகத்தில் பாஜக தேசிய தலைவர்கள் மேற்கொள்ள இருக்கும் பிரச்சாரங்கள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

ஹெச். ராஜாவுக்கு ஆளுநர் பதவி: தேர்தல் நெருங்கிவிட்ட சூழலில், தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளைத் தள்ளி வைத்துவிட்டு, இலக்கை நோக்கிப் பயணிக்க வேண்டியதன் அவசியத்தை பிரதமர் வலியுறுத்தினார். மேலும், பாஜகவின் மூத்த தலைவர் ஹெச். ராஜாவுக்கு விரைவில் ஆளுநர் பதவி வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகப் பிரதமர் மோடி குறிப்பிட்டதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இது கட்சி வட்டாரத்தில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

மொடக்குறிச்சி தொகுதியில் தற்போதைய சட்டப்பேரவை உறுப்பினர் சரஸ்வதிக்கு வாய்ப்பு வழங்கப்படவில்லை என்றாலும், அவரது மருமகள் கிருத்திகா சிவக்குமாருக்கு வாய்ப்பு கொடுக்கப்பட்டிருப்பதை பிரதமர் வரவேற்றுள்ளார். நேற்றைய ஆலோசனைக்குப் பிறகு, மதியம் 1.20 மணியளவில் தனி விமானம் மூலம் பிரதமர் மோடி கொச்சிக்குப் புறப்பட்டுச் சென்றார்.







## புதுச்சேரியில் இருநாட்களில் பிரச்சாரம் ஓய்கிறது

### இன்று அமித் ஷா, ராகுல், ஸ்டாலின் பிரச்சாரம்

புதுச்சேரி: ஏப்.6-

புதுச்சேரியில் இரு நாட்களில் பிரச்சாரம் ஓயவுள்ள நிலையில் நாளை அமித்ஷா, ராகுல். ஸ்டாலின், சீமான் பிரச்சாரத்தில் ஈடுபடுகின்றனர்.

புதுச்சேரியில் சட்டப்பேரவைத் தேர்தல் வரும் ஏப்ரல் 9ம் தேதி நடக்கிறது. இரு நாட்களில் அங்கு பிரச்சாரம் ஓய்கிறது. கடைசி இரு நாட்களில் முக்கியத் தலைவர்கள் புதுச்சேரியில் பிரச்சாரத்துக்கு குவிகின்றனர்.

மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா நாளை தனிவிமானத்தில் கொச்சியில் இருந்து சென்னை வந்து அங்கிருந்து ஹெலிகாப்டரில் புறப்பட்டு புதுச்சேரி வருகிரார். தேசிய ஜனநாயகக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து மண்ணாடிப்பட்டு திருக்கனூரில் பிரச்சாரக் கூட்டத்தில் மாலை பங்கேற்கிறார்.

மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி நாளை டெல்லியிலிருந்து சென்னை வந்து அங்கிருந்து விமானம் மூலம் புதுச்சேரிக்கு வருகிறார். ஈசிஆரில் நடக்கும் பொதுக்கூட்டத்தில் பகல் 11 மணியளவில் பங்கேற்கிறார். அதேபோல் திமுக தலைவரும் தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலின் புதுச்சேரி வருகிறார்.

அவர் நாளை மாலை தட்டாஞ்சாவடி ஒழுங்குமுறை விற்பனை கூட மைதானத்தில் மாலை நடக்கும் பொதுக்கூட்டத்தில் பங்கேற்று பேசுகிறார். அத்துடன் நாம் தமிழர் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து சீமானம் பிரச்சாரம் செய்கிறார். பிரச்சார இறுதி நாளில் தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் நட்டா, திருமாவளவன் உள்ளிட்டோர் பிரச்சாரம் செய்யவுள்ளனர்.

## தைலாபுரம் தோட்டத்து பக்கம் போனாலே எம்எல்ஏ சீட்: வுடு ஜூட் ... தலைதெறிக்க ஓடும் ராமதாஸ் ஆதரவாளர்கள்

சென்னை, ஏப்.6-

பாமகவில் தந்தை, மகன் மோதலால் கட்சி 2ஆக உடைந்த நிலையில் அன்புமணி பாமக அதிமுக, பாஜவுடன் இணைந்து சட்டமன்ற தேர்தலை சந்திக்கிறது. ராமதாஸ் பாமகவோ தன்னந்தனியாக இருந்தபோது சசிகலா ஆதரவு கொடுத்து இருகட்சிகளும் இணைந்து தேர்தலை சந்திக்க கூட்டணி உடன்படிக்கை போடப்பட்டது. அதன்படி இருகட்சிகளிலும் வேட்பாளர்களை அறிவித்து வருகிறார்கள். இதனிடையே அன்புமணி ஆதரவு வேட்பாளர்கள், அதிமுக வேட்பாளர்கள் போட்டியிடும் தொகுதிகளில் ராமதாஸ் தரப்பில் போட்டி வேட்பாளர்களை களமறிக்கி வருகிறார்.



‘வெற்றி’ கிடைக்குமா... என்ற நிலை மாறி ‘டெபாசிட்’ வாங்க முடியுமா... என்ற நிலையில் ராமதாஸ் தரப்பு வேட்பாளர்கள் மனு தாக்கல் செய்ய தயக்கம் காட்டி வருகின்றனர். மேலும், தேர்தல் செலவுக்கு ஒருபைசா கூட கொடுக்காததால் எங்களுக்கு ‘சீட்’ வேண்டாம் என்று ஓட்டம் பிடிக்கவும் தொடங்கியிருக்கிறார்களாம். இதுகுறித்து தைலாபுரம் தோட்டத்து வட்டாரத்தில் விசாரித்த போது, தைலாபுரம் தோட்டத்திற்கு செல்லும் நிர்வாகிகளுக்கு ஏதாவது ஒருதொகுதியில் சீட் பரிசாக கொடுத்து நிற்க சொல்கிறார்கள். இதனால் தோட்டத்து பக்கம் நிர்வாகிகள் வருகை குறைந்துவிட்டது. வந்துபோறதுக்கே பணம் இல்ல... இதில் எங்க நாங்கள் தேர்தலில் போட்டி யிடுவது... என்று நிர்வாகிகள் வெளிப்படையாகவே புலம்பி உள்ளனர். ராமதாசின் மகள் காந்தி கூட இந்த தேர்தலில் நிற்க ஆர்வம் காட்டவில்லையாம். கொஞ்சம் நாளாக அவரும் ஒதுங்கி தான் இருக்கிறார்.தேர்தல் செய்திகள்

விக்கிரவாண்டி தொகுதியில் வேட்பாளராக அறிவிக்கப்பட்ட புகழேந்தி இதனை முன்கூட்டியே அறிந்துதான் 20 நாட்களுக்கு மேலாக இந்த பக்கமே வரவில்லை. மேலும் போனையும் சுவிட்ச்ஆப் செய்துவிட்டார். அப்படி இருந்தும் அவரை வலுகட்டாயமாக பிடித்து விக்கிரவாண்டி தொகுதியில் போட்டியிட வைக்கிறார்கள். இப்படித்தான் தைலாபுரம் தோட்டத்திற்கு வரும் நிர்வாகிகளுக்கு எலக்ஷன் சீட் பரிசாக கொடுப்பதால் பலரும் இங்கு வருவதை தவிர்த்து ஓட்டம் பிடிக்கின்றனர். ஆனால் அய்யாவோ அவர்களை பிடித்துபோட்டு சீட் கொடுத்து வருகிறார். சசிகலா கட்சியில் சீட்டு கொடுத்தால்கூட அங்கு செலவுக்கு பணம் கொடுப்பாங்க. ஆனால் இங்கு வெறும் கையோடு அனுப்பி வைப்பதால் சீட்டே வேண்டாம் என்று ஒதுங்கி வருவதாக கூறுகின்றனர்.

### பெரம்பலூர் சட்டமன்றம்

## மாஸ் காட்டும் அதிமுக வேட்பாளர்!

### கூட்டம் ஓட்டாக மாறுமா?

பெரம்பலூர், ஏப்.6-

தமிழ்நாட்டிலேயே சிறிய மாவட்டமான பெரம்பலூரில் உள்ள (தனி), குன்னம் இரண்டு சட்டமன்ற தொகுதிகளில், குன்னம் சட்டமன்ற தொகுதியில் என்டிஏ கூட்டணியில் ஐஜேகேவுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. ஐஜேகே சார்பில் சரண்யா என்பவர் களமிறக்கப்பட்டுள்ளார். திமுக சார்பில் தற்போதைய போக்குவரத்து துறை அமைச்சர் சிவசங்கர் மீண்டும் போட்டி யிடுகிறார்.

பெரம்பலூர் தனி சட்டமன்ற தொகுதியிலோ, திமுக சார்பில் டாக்டர் ஜெயலட்சுமி களத்தில் உள்ளார். அதிமுக சார்பிலோ இதுவரை பெரம்பலூர் சட்டமன்ற தொகுதியில் மூன்று முறை போட்டியிட்டு, இரண்டு முறை வெற்றி வாகை சூடிய இளம்பை தமிழ்ச்செல்வன் மீண்டும் நான்காவது முறையாக களமிறக்கப்பட்டுள்ளார்.

திமுகவிலோ, தற்போதைய சட்டமன்ற உறுப்பினர் ராஜ் குமாருக்கு அமைச்சர்கள் நேரு, சிவசங்கர் மூலமாக மேல்மட்டத்தில் காய் நகர்த்தி, கிட்டத்தட்ட சீட்டு உறுதியாகி இருந்தது. கடைசி கட்டத்தில் முன்னாள் மத்திய அமைச்சர் ஆ.ராசாவின் சொந்த



இளம்பை தமிழ்ச்செல்வன்

தொகுதி என்பதால், கடும் போராட்டத்திற்குப் பிறகு ஆ.ராசா மூலமாக, டாக்டர் ஜெயலட்சுமிக்கு சீட்டு ஒதுக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறிருக்க, திமுக வேட்பாளர் டாக்டர் ஜெயலட்சுமியை வெற்றி பெறச் செய்ய வேண்டுமென்று, ஆ.ராசா கடுமையாக உழைக்க களத்தில் உள்ளார். காரணம் பெரம்பலூர் தொகுதியில் திமுக ஜெயிக்கவில்லை என்றால், திமுக துணைப் பொது செயலாளராக இருக்கும் ஆ.ராசாவுக்கு திமுக தலைமையில் பெருத்த கெட்ட பெயராகிவிடும்.

அதிமுக வேட்பாளர் இளம்பை தமிழ்செல்வனோ, வேட்பாளர் பட்டியல் அறிவிப்பு வந்த மறுநாளே 50க்கும் மேற்பட்ட வாகனங்களில் பெரம்பலூர் நான்கு ரோட்டில் இருந்து, புதிய பேருந்து நிலையம், பழைய பேருந்து நிலையம் வழியாக தனது அலுவலகத்திற்கு ஒரு கிலோமீட்டருக்கு மேல் வாகனப் பேரணி சென்று மாஸ் காட்டிவிட்டார். இதோடு மட்டுமில்லாது வேட்பு மனு தாக்கலின் போதும், ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் குவிந்து இளம்பலூர் சாலையில் உள்ள மாவட்ட அலுவலகத்தில் இருந்து, மனு தாக்கல் செய்யும் ஆர்டிஓ அலுவலகம் வரை ரோடு முழுவதும் நிற்கும் அளவிற்கு ஸ்தம்பிக்க செய்திருந்தனர். ஆனால் திமுக வேட்பாளரோ, சிம்பிளாக வேட்பு மனு தாக்கல் செய்து சென்றுவிட்டார்.

பெரம்பலூர் சட்டமன்ற தொகுதியில் நான்காவது முறையாக போட்டியிடும் தமிழ்செல்வனுக்கு சொந்தக் கட்சிக்காரர்கள், ஒன்றிய செயலாளர்கள் மூலமாக ஒவ்வொரு கிராமத்திலும் தேர்தல் வேலைகளை முடிக்கி விட்டிருக்கிறார். தற்போது நிலவரப்படி பெரம்பலூர் தொகுதியில் திமுக இன்னும் சோர்வாகவே உள்ளது. ஆனால் அதிமுகவோ பெரும் மாஸ் காட்டி வருவது,



டாக்டர் ஜெயலட்சுமி

அந்த தொகுதியில் வெற்றி வாய்ப்புகள் அதிமுகவுக்கே அதிகம் என தொண்டர்கள் மத்தியிலும் பொதுமக்கள் மத்தியிலும் பரவலாக பேசப்பட்டு வருகிறது.

## பத்து தோல்வி பழனிசாமியை மொத்த தோல்வி பழனிசாமியாக மாற்ற வேண்டும்: உதயநிதி ஸ்டாலின் வலியுறுத்தல்

புதுக்கோட்டை, ஏப்.6-

புதுக்கோட்டை மாவட்டம் விராலிமலை சட்டமன்ற தொகுதி திமுக வேட்பாளர் கே.கே. செல்லபாண்டியனை ஆதரித்து விராலிமலை செக்போஸ்ட் அருகே துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிரசாரம் மேற்கொண்டார். அப்போது அவர் பேசியதாவது: தமிழகத்தில் 234 தொகுதிகளின் வெற்றியில் விராலிமலை தொகுதி வெற்றி முக்கியமானது. இந்த தொகுதியில் அதிமுக வேட்பாளர் யாரென்று



உங்களுக்கு தெரியும். குட்கா புகழ் சொந்தக்காரர். நாடக கம்பெனி போல் செயல்படக்கூடியவர். அவரை நம்பாதீர்கள். தேர்தல் முடிந்தவுடன் குவாரி தொழிலுக்கு சென்றுவிடுவார். அவர் ஐடி, ஈடி வழக்குகளை சந்தித்து வருகிறார். இதேபோல் அதிமுகவை ஈடி, ஐடி, சிபிஐ போன்ற அமைப்புகளை வைத்து பாஜ மிரட்டி கூட்டணி அமைத்துள்ளது.திராவிட மாடல் அரசு விராலிமலை தொகுதிகளில் பல்வேறு நலத்திட்டங்களை செய்துள்ளது. விடியல் பேருந்து திட்டம், மகளிர் உரிமை தொகை, கல்வி உதவி தொகை, நான் முதல்வர் உள்ளிட்ட எண்ணற்ற நலத்திட்டங்களை முதல்வர் ஸ்டாலின் செயல்படுத்தியுள்ளார். மோடியின் அடிமையாக எடப்பாடி செயல்படுகிறார். ஜாடிக்கு ஏற்ற மூடி போல் மோடிக்கு எடப்பாடி உள்ளார். டெல்லி ரிமோட் மூலம் தமிழகத்தை இயக்கப்பார்க்கிறது. அதன் பியூசை பிடுங்க வேண்டும். தமிழ்நாடு எப்போதும் அவுட் ஆப் கண்ட்ரோல் தான்.பத்து தோல்வி பழனிசாமினு சொல்வார்கள். இந்த தேர்தலில் தோற்கடித்து மொத்த தோல்வி பழனிசாமி என்று மாற்ற வேண்டும். சொன்னதையும் செய்து, சொல்லாததையும் செய்யும் தலைவர் ஸ்டாலின் மீண்டும் முதல்வராக வேண்டும் என்றார்.



# புதுச்சேரியில் தேர்தல் களம் தயார் ஆட்சியர் அதிரடி ஆய்வு!

புதுச்சேரி, ஏப்.6-

பயிற்சி வகுப்புகள் தீவிரம்: 2026 சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு, பாரதிதாசன் மகளிர் கல்லூரி, ஜிப்மர் உள்ளிட்ட 3 மையங்களில் வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு நேரடிப் பயிற்சி. பயிற்சி மையங்களுக்கு நேரில் சென்று மாவட்ட தேர்தல் அதிகாரி திரு. குலோத்துங்கன் (IAS) விரிவான ஆய்வு. ஏப்ரல் 9 வாக்குப்பதிவு நாளன்று, 12 வகை ஆவணங்களைச் சரிபார்த்து வாக்காளர்களுக்குச் சிரமமின்றி உதவ அலுவலர்களுக்கு உத்தரவு. முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான சாய்வு தளம், குடிநீர், பந்தல் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் தயார் நிலையில் இருப்பதை உறுதி செய்தார்.

# அவிநாசியில் அதிகரித்த அரசியல் சூடு.! எல். முருகனை 75,000 வாக்கு வித்தியாசத்தில் ஜெயிக்க வைப்போம்!"

## எஸ்.பி. வேலுமணி சூளுரை




திருப்பூர்/அவிநாசி ஏப்.6-

திருப்பூர் மாவட்டம் அவிநாசி சட்டமன்றத் தொகுதியில் தேசிய ஜனநாயகக் கூட்டணி சார்பில் பாரதிய ஜனதா கட்சியின் வேட்பாளராகப் போட்டியிடும் மத்திய இணை அமைச்சர் எல். முருகன் அவர்களின் அறிமுகக் கூட்டம், சேவூர் சாலையில் உள்ள கொங்கு கலையரங்கில் பிரம்மாண்டமாக நடைபெற்றது.

*எஸ்.பி. வேலுமணி வேண்டுகோள்* : முன்னாள் அமைச்சர் எஸ்.பி. வேலுமணி பேசுகையில், "அவிநாசி தொகுதியில் எல். முருகன் அவர்களை 75 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்ய வேண்டும். அவர் வெற்றி பெற்றால் அத்திக்கடவு அவிநாசி திட்டம் 2வது கட்டத்தைச் செயல்படுத்தி அனைத்துப் பகுதிகளுக்கும் தண்ணீர் கிடைக்க வழிவகை செய்வோம்" என்றார்.

*எல். முருகன் அதிரடிப் பேச்சு:* கூட்டத்தில் பேசிய எல். முருகன், "திமுக ஆட்சியில் மின் கட்டணம் மற்றும் வீட்டு வரி உயர்வால் மக்கள் கடும் துயரத்தில் உள்ளனர். இது ஒரு குடும்ப ஆட்சி; கருணாநிதி, ஸ்டாலின், உதயநிதி எனத் தொடர்கிறது. ஆனால் பாஜகவில் சாதாரண தொண்டனும் உயர் பதவிக்கு வர முடியும். நாட்டில் முன்னேற்றம் ஏற்பட மத்தியிலும் மாநிலத்திலும் தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சி (இரட்டை இன்ஜின் சர்க்கார்) அமைய வேண்டும்" என்றார்.

*திமுக மீது ஊழல் புகார்:* செய்தியாளர் சந்திப்பில் பேசிய அவர், "அத்திக்கடவு திட்டத்தைக் கிடப்பில் போட்டது திமுக அரசு. 2ஜி ஊழல் தொடர்பான புதிய வீடியோ மற்றும் ஆடியோ ஆதாரங்கள் வெளியாகி மக்கள் மத்தியில் கோபத்தை ஏற்படுத்தியுள்ளது. அவிநாசி தொகுதிக்குப் பொறுப்பாளர்களாக நியமிக்கப்பட்ட ஆ.ராசா மற்றும் செந்தில் பாலாஜி ஆகியோரின் பின்னணி அனைவருக்கும் தெரியும். இவர்களை மக்கள் நிராகரிப்பார்கள்" எனத் தெரிவித்தார்.

*வெற்றி சபதம்:*

நிச்சயமாக 75 ஆயிரம் வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்று, அண்ணன் எடப்பாடி பழனிசாமி அவர்களை மீண்டும் முதலமைச்சர் ஆக்குவோம் என எல். முருகன் தனது உரையில் உறுதிபடத் தெரிவித்தார்.

# "ராஜ்யசபா எம்.பி. சீட் தருவதாக இபிஎஸ் உறுதியளித்தார்" கடிதத்தை காட்டி பிரேமலதா ஆவேசம்



திருவண்ணாமலை, ஏப்.6-

ராஜ்யசபா எம்.பி சீட் தருவதாக அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி கையெழுத்துப் போட்டுக்கொடுத்த கடிதத்தை, தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா ஊடகங்களிடம் காண்பித்தார்.

திருவண்ணாமலையில் செய்தியாளர்களிடம் பேசிய பிரேமலதா, "எடப்பாடி பழனிசாமி எங்களைப் பார்த்து அரை பர்சன்ட் ஓட்டு என்கிறார். உங்களுக்கு ஏன் வயிறு எரிகிறது. உங்கள் கூட தானே 2011 முதல் 2026 வரை இருந்தோம். முதல்வர் வேட்பாளராக இருந்துகொண்டு அவர் இவ்வாறு பேசுவது அழகல்ல.

தேமுதிகவுக்கு மாநிலங்களவை எம்.பி பதவி தருவதாக எடப்பாடி பழனிசாமி கையெழுத்து போட்டதை முதன்முறையாக இப்போது அண்ணாமலையார் கோயிலில் உங்களுக்கு காட்டுகிறேன். நான் எங்கே கையெழுத்து போட்டுக் கொடுத்தேன் என்று பழனிசாமி கேட்டார். அரசியலில் கண்ணியத்தை கடைபிடித்து நான் இதுவரை இந்தக் கடிதத்தை வெளிக்காட்டாமல் இருந்தேன். இப்படி வெளிக்காட்டும் சூழ்நிலைக்கு அவர்தான் கொண்டுசென்றார்.

2024ல் தேமுதிகவுக்கு 5 மக்களவை எம்.பி தொகுதிகளும், ஒரு மாநிலங்களவை எம்.பி பதவியும் வழங்கப்படும் என்று அவர் கையெழுத்துப் போட்டு கொடுத்தார், நானும் கையெழுத்து போட்டேன். எந்த ஆண்டு ராஜ்யசபா எம்.பி பதவி கொடுக்கப்படும் என வருடத்தை போட்டு தருமாறு அவரிடம் அப்போதே சொன்னேன். எம்ஜிஆர் காலம் முதல் இப்படி கொடுப்பதே வழக்கம் என்று சொல்லிவிட்டு, என் வார்த்தைதான் முக்கியம் என்று அவர் சொன்னார். அவரின் வார்த்தையை நாங்கள் நம்பினோம். ஆனால் நம்பிக்கைக்கு புறம்பாக அவர் 2025ல் எங்களுக்கு ராஜ்யசபா கொடுக்காமல் ஏமாற்றினார்.

எங்கள் கட்சியை 'ஐசியுவில் இருந்த கட்சி' என்கிறார் பழனிசாமி. அவர் இவ்வாறு பேசுவது தவறு. அண்ணா சொன்னபடி நாங்கள் கண்ணியத்தை கடைபிடிக்கிறோம். ஆனால், அதிமுகவில் உள்ள முன்னாள் அமைச்சர்கள் மற்றும் தொண்டர்கள், நாங்கள் கூட்டணியிலிருந்து வெளியேறியதை ஏற்றுக்கொள்ளவில்லை. பழனிசாமி செய்தது தவறு என்பதை அதிமுகவினர் சுட்டிக்காட்டி வருகின்றனர். அவரின் பேச்சுக்கெல்லாம் மே4ம் தேதி மக்கள் பதில் சொல்வார்கள்" என்றார்

# மகாராஷ்டிராவில் கிணற்றில் கார் விழுந்த விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 9 பேர் உயிரிழப்பு




மும்பை, ஏப்.6-

மகாராஷ்டிராவின் நாசிக் மாவட்டத்தில் சாலையோரக் கிணற்றில் கார் விழுந்த விபத்தில் 6 குழந்தைகள் உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 9 பேர் உயிரிழந்தனர்.

மகாராஷ்டிராவின் நாசிக் மாவட்டம், திண்டோரி நகரில் உள்ள தனியார் பயிற்சி நிறுவனம் ஒன்றில் நேற்று முன்தினம் மாலை ஆண்டு விழா நடைபெற்றது. இந்த விழாவில் அதே பகுதியின் இந்தூர் கிராமத்தை சேர்ந்த சுனில் தத்தாத்ரேய தர்கோடே என்பவர் தனது குடும்பத்தினருடன் கலந்து கொண்டார். இரவு விழா முடிந்த பிறகு இவர்கள் தங்கள் காரில் சொந்த ஊருக்குப் புறப்பட்டனர். காரை சுனில் தர்கோடே ஓட்டினார்.

இந்நிலையில் திண்டோரி தாலுகா, சிவாஜி நகர் பகுதியில் இரவு 11.30 மணியளவில் கார் கட்டுப்பாட்டை இழந்து சாலையோரம் இருந்த கிணற்றில் விழுந்தது.

தகவல் அறிந்த போலீஸார் மற்றும் தீயணைப்புப் படையினர் அங்கு விரைந்தனர். பிறகு தேசியப் பேரிடர் மீட்புப் படையினரும் அங்கு வந்து சேர்ந்தனர். கிணற்றில் கணிசமான அளவு தண்ணீர் இருந்ததால், அதனுள் மூழ்கியிருந்த காரை வெளியே எடுப்பது மிகவும் சவாலான பணியாக இருந்தது. சுமார் 2 மணி நேர போராட்டத்துக்குப் பிறகு கிரேன் உதவியுடன் கிணற்றில் இருந்து கார் வெளியே எடுக்கப்பட்டது. அதிலிருந்த 9 பேரும் மருத்துவமனைக்குச் கொண்டு செல்லப்பட்டனர். ஆனால் அவர்கள் அனைவரும் ஏற்கெனவே இறந்துவிட்டதாக மருத்துவர்கள் அறிவித்தனர்.

அவர்கள் அனைவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். விபத்தில் இறந்தவர்களுக்கு மகாராஷ்டிர முதல்வர் தேவேந்திர பட்னாவிஸ் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்தார். இறந்தவர்களின் வாரிசுதாரர்களுக்கு அரசு சார்பில் ரூ.5 லட்சம் நிதியுதவி வழங்கப்படும் என அறிவித்தார். மேலும் இந்த சம்பவம் குறித்து விரிவான விசாரணை நடத்த மாவட்ட நிர்வாகத்துக்கு உத்தரவிட்டார். சாலைக்கு அருகில் உள்ள கிணற்றை மூட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காததே விபத்துக்கு காரணம் என மாநில அமைச்சர் கிரிஷ் மகாஜன் கூறினார்.



# விருதுநகர் உள்ளிட்ட 3 மாவட்ட மலைப் பகுதிகளில் நாளை கனமழைக்கு வாய்ப்பு

சென்னை, ஏப்.6-

தமிழகத்தில் விருதுநகர் உள்ளிட்ட 3 மாவட்ட மலைப் பகுதிகளில் நாளை (ஏப்.6) கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

ராயலசீமா மற்றும் அதனை ஒட்டிய பகுதிகள் முதல் மன்னார் வளைகுடா வரை சுமார் 900 மீட்டர் உயரத்தில் தமிழகம் வழியாக ஒரு காற்றழுத்த தாழ்வு பாதை நிலவுகிறது. இதன் காரணமாக நாளை (ஏப்.6) தென் தமிழகம் மற்றும் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் 7ம் தேதி தமிழக கடலோர மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், 8ம் தேதி தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். 9, 10 தேதிகளில் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் அதனை ஒட்டிய மாவட்டங்கள், தமிழக கடலோர மாவட்டங்களிலும், 11ம் தேதி மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் அதனை ஒட்டிய மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும். இதர பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

வட தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் நாளையும், நாளை மறுதினமும் ஓரிரு இடங்களில் வழக்கத்தை விட 5 டிகிரி ஃபாரன்ஹீட் அளவு வரை அதிகமாக இருக்கக்கூடும்.

தமிழகத்தில் நாளை விருதுநகர், தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களின் மலைப்பகுதிகளில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 100 டிகிரி, குறைந்தபட்ச வெப்பநிலை 82 டிகிரி ஃபாரன்ஹீட் அளவை ஒட்டி இருக்கக்கூடும்.

தமிழகத்தில் இன்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவுகளின்படி அதிகபட்சமாக திருநெல்வேலி மாவட்டம் நாலுமுக்கு, ஊத்தில் 7 செமீ, வேலூர் மாவட்டம் பொன்னை அணை, திருநெல்வேலி மாவட்டம் காக்காச்சி, நீலகிரி மாவட்டம், பார்வூட், கடலூர் மாவட்டம் தொழுதூரில் தலா 5 செமீ மழை பதிவாகியுள்ளது.

இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# 28 மாவட்டங்களுடன் ஆந்திர மாநிலத்தின் புதிய வரைபடம் வெளியீடு



அமராவதி, ஏப்.6-

புதிய ஆந்திர மாநிலத்தின் ஒரே மற்றும் நிரந்தர தலைநகராக அமராவதியை அறிவிக்கும் மசோதா நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதையடுத்து முதல் முறையாக தற்போது 28 மாவட்டங்கள் கொண்ட புதிய ஆந்திர மாநிலத்தின் வரை படத்தை தேசிய விபத்து தடுப்புத் துறை வெளியிட்டுள்ளது.

இதில் மாவட்டங்களின் எல்லைகள், வனப்பகுதிகள், சாலைகள், தேசிய நெடுஞ்சாலைகள் என அனைத்தும் துல்லியமாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் தொகுதிகள் வாரியாகவும் அந்த வரைப்படம் தெளிவாக உள்ளது. இந்த வரைபடத்தில் அமராவதியை தலைநகரமாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆந்திராவின் பல்நாடு, குண்டூர், கிருஷ்ணா மற்றும் என்.டி.ஆர். மாவட்டங்களில் உள்ள பகுதிகளை இணைத்து அமராவதி நகரம் என தெள்ளத்தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த ஜெகன் ஆட்சியில் இருந்த 26 மாவட்டங்களுடன் தற்போது கூடுதலாக மார்க்காபுரம் மற்றும் போலாவரம் இணைந்து 28 மாவட்டங்களாக குறிப்பிடப்பட்டுள்ளது.

புயல், வெள்ளம் போன்ற இயற்கை பேரிடரின் போது மாநில, மாவட்ட எல்லைகள் தெரிய வேண்டிய அவசியம் என்பதால், இந்த வரைபடத்தை முதல் முறையாக தேசிய விபத்து தடுப்புத் துறை தயாரித்ததாக கூறப்படுகிறது

# ஈரானிடமிருந்து 7 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியா கச்சா எண்ணெய் கொள்முதல்



புது டெல்லி, ஏப்.6-

மத்திய கிழக்கில் நீடித்து வரும் போர் பதற்றத்துக்கு மத்தியில், இந்திய சுத்திகரிப்பு ஆலைகள் 2019 ஆம் ஆண்டிற்குப் பிறகு ஏழு ஆண்டுகளில் முதன்முறையாக ஈரானிடமிருந்து கச்சா எண்ணெய் கொள்முதல் செய்துள்ளது.

மேற்கு ஆசியாவில் அதிகரித்து வரும் பதற்றத்தால் ஹார்முஸ் ஜலசந்தி வழியாக கப்பல் போக்குவரத்து தடைபட்டுள்ள நிலையில், இந்திய சுத்திகரிப்பு ஆலைகள் ஈரானிடமிருந்து எண்ணெய் கொள்முதல் செய்துள்ளன. உலகின் மூன்றாவது பெரிய கச்சா எண்ணெய் இறக்குமதி நாடான இந்தியா, அமெரிக்கத் தடைகள் காரணமாக மே 2019 முதல் ஈரானிடமிருந்து எண்ணெய் வாங்குவதை நிறுத்தியது குறிப்பிடத்தக்கது.

இதுகுறித்து வெளியுறவு அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில், "மத்திய கிழக்கு பதற்றத்துக்கு மத்தியில், இந்திய நிறுவனங்கள் ஈரான் உட்பட பல நாடுகளிடமிருந்து கச்சா எண்ணெய் வாங்கியுள்ளன. மேலும், ஈரானிடம் கச்சா எண்ணெய் இறக்குமதிக்கு பணம் செலுத்துவதில் எந்தத் தடையும் இல்லை. இதனால் வரும் மாதங்களுக்கான இந்தியாவின் கச்சா எண்ணெய் தேவைகள் முழுமையாகப் பாதுகாக்கப்பட்டுள்ளன" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், பணம் செலுத்துதல் தொடர்பான தடைகள் காரணமாக இந்தியாவிற்கான ஈரானிய எண்ணெய் கப்பல், சீனாவிற்குத் திருப்பி விடப்பட்டதாக வந்த செய்திகளையும் மத்திய அரசு மறுத்துள்ளது.

2018ல் அமெரிக்காவின் தடைகள் கடுமையாக்கப்படுவதற்கு முன்பு, ஈரான் லைட் மற்றும் ஈரான் ஹெவி ஆகிய இரண்டு வகை எண்ணெய்களையும் இறக்குமதி செய்து, ஈரானிய கச்சா எண்ணெயின் மிகப்பெரிய வாங்கும் நாடாக இந்தியா இருந்தது. அப்போது ஈரானிய கச்சா எண்ணெய் இந்தியாவின் மொத்த இறக்குமதியில் சுமார் 11.5 சதவீதமாக இருந்தது.

பின்னர், அமெரிக்கா கடும் கட்டுப்பாடுகளை விதித்த பிறகு, ஈரானிடமிருந்து இந்தியா எண்ணெய் இறக்குமதியை முற்றிலுமாக நிறுத்தியது.

தற்போதைய போர் காரணமாக ஈரானிடமிருந்து எண்ணெய் வாங்க அமெரிக்கா பல தளர்வுகளை அறிவித்துள்ளதால், மீண்டும் இந்தியா எண்ணெய் கொள்முதல் செய்ய தொடங்கியுள்ளது

# ஆத்தூரில் ஐ.பி.ஆருக்குக் குவியும் ஆதரவு! பிள்ளைமார் பேரவை அதிரடி முடிவு



சின்னாபட்டி, ஏப்.6-

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் சட்டமன்ற தொகுதியில் திமுக சார்பாக போட்டியிடும் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களுக்கு ஆதரவு தெரிவித்து, சின்னாளபட்டி, ஆதிலெட்சுமிபுரம், மேலக்கோட்டை, காந்திகிராமம் ஆகிய பகுதிகள் அடங்கிய சின்னாளபட்டி வட்டார அனைத்து பிள்ளைமார் பேரவை நிர்வாகிகள் தலைவர் ஆர்.ஏ.கிருஷ்ணன், செயலாளர் என்.குணசேரன், பொருளாளர் எஸ்.சுகுமாறன், நிர்வாகிகள் சுடலைமுத்து, குருபரன், சரவணன், பஞ்சாட்சரம், ஆசிரியர் செந்தில், குருசாமி, பாண்டியன் உட்பட 20க்கும் மேற்பட்டோர் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களை சந்தித்து சட்டமன்ற 2026 சட்டமன்ற தேர்தலில் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களுக்கு ஆதரவு அளித்து, அவரது வெற்றிக்கு உறுதுணையாக இருப்போம் என சொல்லி, சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்தனர்.

அப்போது அவர்கள் மத்தியில் பேசிய அமைச்சர் ஐ.பெரியசாமி, எப்போதும் நான் உங்களுக்கு உறுதுணையாக இருப்பேன் என கூறி பேரவை நிர்வாகிகளுக்கு நன்றி தெரிவித்தார்.

நிகழ்ச்சியின்போது திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், அவைத்தலைவர் வழக்கறிஞர் காமாட்சி, ஒன்றிய செயலாளர்கள் முருகேசன், ராஜேந்திரன், ராமன், அகரம் பேரூராட்சி மன்ற தலைவர் நந்தகோபால் (எ) மணி, திமுக நிர்வாகி அம்பை ரவி, சின்னாளபட்டி மெடிக்கல் கோபி, 1வது வார்டு திமுக நிர்வாகி பற்குணன் உட்பட திமுக நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.



## “மாற்றத்திற்கான ஒரு வாய்ப்பு தாருங்கள்!” கனிவுடன் வாக்குக் கேட்ட சோழவந்தான் வேட்பாளர் நாகலட்சுமி

அலங்காநல்லூர் ஏப்.6:-

மதுரை மாவட்டம் சோழவந்தான் சட்டமன்றத் தொகுதியில் நாம் தமிழர் கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளர் நாகலட்சுமி, அலங்காநல்லூர் அருகேயுள்ள அய்யூர் கிராமத்தில் வீடு வீடாகச் சென்ற வேட்பாளர் நாகலட்சுமி, அங்கிருந்த மகளிர், முதியவர்கள் மற்றும் முதல்முறை வாக்களிக்கும் இளைஞர்களிடம் 'விவசாய ஏர்க்கலப்பை' சின்னத்திற்குத் துண்டுப் பிரசுரங்களை வழங்கி ஆதரவு கோரினார்.

பயணம் செய்த பகுதிகள்: அய்யூரைத் தொடர்ந்து எர்ரம்பட்டி, கீழசின்னணம்பட்டி, கோவில்பட்டி, வைகாசிபட்டி, மீனாட்சிபுரம், இடையபட்டி, அழகாபுரி, ஒத்தவீடு மற்றும் காந்திகிராமம் ஆகிய கிராமப் பகுதிகளில் தீவிர வாக்கு சேகரிப்பு நடைபெற்றது.

இந்நிகழ்வில் சட்டமன்ற மாநில ஒருங்கிணைப்பாளர் சக்கரபாணி, மண்டலச் செயலாளர் சங்கிலி முருகன், ஒன்றியத் தலைவர் திருப்பதி, துணைத் தலைவர் கே.ஜி. பாண்டியன் மற்றும் செயலாளர்கள் கண்ணதாசன், மூக்குச்சாமி, சுரேந்திரன், கார்த்திகேயன் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.

## மே 10ல் உங்கள் இல்லம் தேடி வரும் ரூ. 8,000 கூப்பன்! மகளிர் அனைவருக்கும் ரூ. 2,000 உரிமைத் தொகை ஆத்தூரில் ஐ.பி.ஆர்

சின்னாளபட்டி, ஏப்.6-

மே மாதம் தேர்தல் முடிவுக்கு பிறகு மகளிர் அனைவருக்கும் ரூ. 2 ஆயிரம் வங்கி கணக்கில் வந்துவிடும் என்று சொக்கலிங்கபுரம் தேர்தல் பிரச்சாரத்தில் அமைச்சர் ஐ.பெரியசாமி பேசினார். பிரச்சாரத்திற்கு வந்த அவருக்கு நூற்றுக்கும் மேற்பட்ட பெண்கள் கும்பமரியாதையுடன் உற்சாக வரவேற்பு அளித்தனர். பாளையங்கோட்டை ஊராட்சிக்குட்பட்ட பிரவான்பட்டி, கூலம்பட்டி, பாளையங்கோட்டை ஆகிய ஊர்களுக்கு சென்று பிரச்சாரம் செய்த பின்பு போடிகாமன்வாடி ஊராட்சிக்கு உட்பட்ட வீரசிக்கம்பட்டி, போடிகாமன்வாடி, சொக்கலிங்கபுரத்தில் அமைச்சர் ஐ.பெரியசாமி பிரச்சாரம் செய்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குசேகரித்தார்.



அப்போது பொதுமக்கள் மத்தியில் பேசிய அமைச்சர் ஐ.பெரியசாமி, 15 வருடங்களுக்கு முன் கொடுத்த கலைஞர் டி.வி. இன்றும் பல வீடுகளில் உள்ளது. ஆனால் அதிமுக ஆட்சியில் கொடுக்கப்பட்ட மிக்ஸி, கிரைண்டர் ஒரு வீட்டில்கூட இல்லை. காரணம் தரமான பொருட்களை தமிழக மக்களுக்கு வழங்கிய முத்தமிழ் அறிஞர் கலைஞர் வழியில் வந்த திராவிட மாடல் ஆட்சி நாயகன் தளபதியார் அவர்கள் ஒரு படி மேலே போய் ரூ. 8 ஆயிரத்திற்கான கூப்பன்களை வழங்கி அதை பெண்களே தங்களுக்கு விருப்பமான கடைகளில் விருப்பமான பொருட்களை வாங்கிக் கொள்ளலாம் என தேர்தல் அறிக்கையில் தெரிவித்துள்ளார். நீங்கள் ஏப்ரல் 23ம் தேதி உதயசூரியனுக்கு வாக்களித்த பின்பு மே 10ம் தேதி உங்கள் இல்லம் தேடி ரூ. 8 ஆயிரத்திற்கான கூப்பன் வருவதோடு, உங்களுக்கு மகளிர் உரிமைத் தொகையாக ரூ. 2 ஆயிரம் கிடைக்கப் போகிறது.

முத்தமிழ் அறிஞர் சுயஉதவிக்குழுக்களை உருவாக்கி எப்படி பெண்களை முன்னேற்றத்திற்கு கொண்டு வந்தாரோ, அதுபோல மீண்டும் தமிழக முதல்வராக பதவியேற்கப்போகும் தளபதி, அனைத்து தொழில், அனைத்து வேலைகளிலும் பெண்கள் அதிக அளவில் வர வேண்டும் என்பதற்காக பெண்களுக்கான நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். அவருக்கு நீங்கள் உறுதுணையாக இருக்க உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்க வேண்டும் என்றதோடு, மீண்டும். திமுக அரசு ஆட்சியில் அமைந்த பின்பு கிராம ஊராட்சிகளில் 100 நாள் வேலை தங்குதடையின்றி கிடைக்கும் என்றார்.

நிகழ்ச்சியில் திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், ஒன்றிய செயலாளர்கள் பாறைப்பட்டி ராமன், ராஜேந்திரன், முன்னாள் ஒன்றிய செயலாளார் பி.சி.முரளிதரன், முன்னாள் மாவட்ட ஊராட்சி மன்ற தலைவர் பாஸ்கரன், ஒன்றிய அவைத்தலைவர் காணிக்கைசாமி, மாவட்ட விவசாய துணை அமைப்பாளர் சொக்கலிங்கபுரம் சசிகுமார், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் மணலூர் மணிகண்டன், முன்னாள் ஊராட்சி மன்றத்தலைவர்கள் நாகலெட்சுமி சசிகுமார், கருப்பையா, சிவக்குமார், ராஜேஸ்வரி தங்கவேல், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் பாப்பாத்தி, மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணியைச் சேர்ந்த வாஞ்சிநாதன், கணேசன் உட்பட திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## “விஜய் மனதில் பாஜக; அதனால்தான் எங்கள் வேட்பாளர் பெயரை கூறினார்” குஷ்பு

புதுச்சேரி, ஏப்.6-

விஜய் மனதில் பாஜக உள்ளதால்தான் புதுச்சேரியில் அவரது வேட்பாளருக்கு பதில் பாஜக வேட்பாளர் பெயரை கூறினார். ராகுல் ஒருகாலத்திலும் பிரதமராக முடியாது என பாஜக துணைத் தலைவர் குஷ்பு தெரிவித்துள்ளார்.

தமிழக பாஜக துணைத் தலைவர் குஷ்பு புதுவையில் தொண்டமாநத்தம் முதல் பத்துக்கண்ணு சந்திப்பு வரை ரோடு ஷோ நடத்தி, தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து பிரச்சாரத்தில் இன்று ஈடுபட்டார்.

இதைத்தொடர்ந்து அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: தமிழகத்தில் ஊழல் ஆட்சி நடக்கிறது. 8,9 ம் வகுப்பு குழந்தைகளிடம் சாராயம், போதைப் பொருட்கள் கிடைக்கிறது. [illegible] புதுவையில் [illegible] ஆட்சி நடக்கிறது. புதுவையில் ரெஸ்டோபார்களுக்கு கட்டுப்பாடுகள் உள்ளது. ஆனால் தமிழகத்தில் பள்ளி மாணவர்கள் மது அருந்திவிட்டு வகுப்பறைகளில் வந்து தகராறில் ஈடுபடுகின்றனர்.



புதுவை ரெஸ்டோபார்களுக்கும், தமிழக சாராயத்துக்கும் வித்தியாசம் உள்ளது. மக்களை ஏமாற்றி, பொய் வாக்குறுதியை அளித்து 5 ஆண்டு திமுக ஆட்சி நடத்தியது. டீசல் விலைக்கு மத்திய அரசு வரி சலுகை அளித்துள்ளது. ஆனால் அதைப்பற்றி பேச தமிழக அரசுக்கு வக்கில்லை. புதுவைக்கு மாநில அந்தஸ்து வழங்குவதாக பொய்யான வாக்குறுதி அளிக்க முடியாது. புதுவைக்கு மாநில அந்தஸ்து வழங்குவது மிகப்பெரிய நடவடிக்கை. இதுகுறித்து பல மாநிலங்களுடன் பேச வேண்டியுள்ளது. தேவையான விஷயத்தை பாஜக சரியான காலத்தில் செய்யும்.

மல்லிகார்ஜுன கார்கே தனது நாற்காலியை காப்பாற்ற பிரதமராகவோ, குடியரசுத் தலைவராகவோ ராகுல் ஆவார் எனச் சொல்வார். ராகுல் பிரதமராவது கனவு. அவர்கள் கனவு காண்பதற்கு உரிமை உண்டு. ஆனால் அவரால் ஒருபோதும் பிரதமர் ஆக முடியாது. புதுவை மதுவை மட்டும் நம்பி இல்லை. புதுவை சுற்றுலா நகரம். இங்கு அளவோடு மது உள்ளது. ஆனால் தமிழகத்தில் மது விற்பனையை மட்டுமே நம்பி அரசு செயல்படுகிறது.

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளது. தமிழகத்துக்கு ரூ.10 லட்சம் கோடி கடன் உள்ளது. சாலை உட்பட அடிப்படை வசதிகள் இல்லை. தமிழகத்தில் துப்புரவு பணியாளர்கள், ஆசிரியர்கள் தொடர் போராட்டம் நடத்தினர். இளைஞர்களை போதைக்கு அடிமையாக்கி வைத்துள்ளனர். தமிழகம், புதுவையில் நிச்சயம் தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றி பெறும்.

விஜய் நேற்றுதான் அரசியலுக்கு வந்துள்ளார். அவரை விட்டுவிடுங்கள், அவரைப்பற்றி பேச வேண்டாம். அவர் மனதில் பாஜக உள்ளதால்தான் புதுவை பிரச்சாரத்தின்போது அவர் கட்சி வேட்பாளருக்கு பதிலாக பாஜக வேட்பாளர் பெயரை கூறியுள்ளார். பிரதமர் மோடி வருகையால்தான் திமுக வலுப்பெறுகிறது என்று ஸ்டாலின் குறிப்பிட்டார். அப்போதும் ஸ்டாலினுக்கு பாஜகதான் தேவைப்படுகிறது,” என்றார்.

## போர் விமானத்திலிருந்து காணாமல் போன அமெரிக்க விமானியை ஈரானுக்குள் புகுந்து மீட்டோம்: ட்ரம்ப்

வாஷிங்டன், ஏப்.6-

அமெரிக்க போர் விமானம் ஈரானால் சுட்டு வீழ்த்தப்பட்டபோது காணாமல் போயிருந்த விமானி, பரபரப்பான துப்பாக்கிச் சண்டைக்குப் பிறகு பாதுகாப்பாக மீட்கப்பட்டதாக டொனால்டு ட்ரம்ப் தெரிவித்தார்.

ஈரான் வான் பரப்பில் பறந்த அமெரிக்க விமானப் படையின் எப் 35 மற்றும் எப் 15 இ ரக போர் விமானங்களை நேற்று முன் தினம் சுட்டு வீழ்த்தப்பட்டன. இதில் ஒரு விமானி பத்திரமாக திரும்பிய நிலையில், மற்றொரு விமானி காணாமல் போனார்.

இந்த சூழலில் அவரை ஈரானும், அமெரிக்காவும் தீவிரமாக தேடியது. அந்த விமானியை உயிருடன் பிடிப்பவருக்கு 60,000 டாலர் வெகுமதி வழங்கப்படும் என ஈரான் அறிவித்திருந்தது. இதனையடுத்து, ஈரானால் சுட்டு வீழ்த்தப்பட்ட போர் விமானத்தின் விமானி மீட்கப்பட்டு, தற்போது பாதுகாப்பாக ஈரானை விட்டு வெளியேறிவிட்டார் என்று அமெரிக்க உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.



இதுகுறித்து அமெரிக்க அதிபர் ட்ரம்ப் வெளியிட்ட சமூக வலைதளப் பதிவில், "நாங்கள் அவரைக் கண்டுபிடித்துவிட்டோம். என் சக அமெரிக்கர்களே, கடந்த சில மணிநேரங்களில், அமெரிக்க ராணுவம், நமது அமெரிக்க அதிகாரி ஒருவருக்காக, அமெரிக்க வரலாற்றிலேயே மிகவும் துணிச்சலான தேடுதல் மற்றும் மீட்பு நடவடிக்கைகளில் ஒன்றை வெற்றிகரமாக நிகழ்த்தியுள்ளது. அவர் மிகவும் மதிக்கப்படும் ஒரு கர்னலாகவும் இருக்கிறார்.

பென்டகன் அந்த அதிகாரியை 24 மணி நேரமும் கண்காணித்து வந்தது. அவரை மீட்பதற்காக விடாமுயற்சியுடன் திட்டமிட்டு வந்தது. அவரை மீட்க, உலகின் மிகவும் சக்திவாய்ந்த ஆயுதங்களைக் கொண்ட பல விமானங்களை நம் ராணுவம் அனுப்பியது. அந்த விமானி, ஈரானின் அபாயகரமான மலைப்பகுதிகளில் பதுங்கி இருந்தார். தொடர்ந்து அவர் நமது எதிரிகளால் தேடப்பட்டுக் கொண்டிருந்தார்.

அமெரிக்கப் படைகளின் மீட்பு முயற்சியின்போது கடுமையான துப்பாக்கிச் சண்டைக்குப் பின் அவர் மீட்கப்பட்டார். ஈரானிய வான்வெளியில் நாம் மிகப்பெரிய வான் ஆதிக்கத்தை அடைந்துவிட்டோம் என்பதை இந்த நடவடிக்கை காட்டுகிறது. இந்த மீட்புப் பணியில் எந்த அமெரிக்கரும் கொல்லப்படவோ அல்லது காயமடையவோ இல்லை” என்று அவர் குறிப்பிட்டார். இந்த மீட்பு நடவடிக்கை குறித்து ஈரான் இன்னும் எந்தப் பதிலும் அளிக்கவில்லை.



## சிறுபான்மையின நிறுவனங்களை பாதிக்கும் எப்சிஆர்ஏவை மறுபரிசீலனை செய்ய வேண்டும் கத்தோலிக்க யூனியன் வலியுறுத்தல்

குவாஹாட்டி, ஏப்.6-

வெளிநாட்டு நிதி நடைமுறையை கடுமையாக்க வெளிநாட்டு நிதி திருத்த மசோதாவை மத்திய அரசு மக்களவையில் கடந்த மாதம் 25ம் தேதி அறிமுகம் செய்தது.

இதுகுறித்து அகில இந்திய கத்தோலிக்க யூனியன் விடுத் துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: இந்த மசோதாவில் வெளிநாட்டு நிதி ஒழுங்குமுறை சட்ட உரிமங்கள் ரத்து செய்யப்படும் அல்லது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படும் சிறுபான்மை நிறுவனங்களின் சொத்துகளை கட்டுப்படுத்த அல்லது அவற்றை அகற்ற அரசு அதிகாரிகளுக்கு அதிகாரம் அளிக்கும் பிரிவுகள் கவலையளிப்பதாக உள்ளன. இது போன்ற சட்டப்பிரிவுகள் தவறான முன்மாதிரியை ஏற்படுத்தும் மற்றும் நிர்வாக ரீதியான வரம்பு மீறலுக்கு வழிவகுக்கும்.

இந்த நடவடிக்கை, அரசியலமைப்பு ரீதியாகப் பாதுகாக்கப்பட்ட உரிமைகளுக்குள் நேரடியாக ஊடுருவுவது போன்றது. இந்த திருத்தங்கள், மதச் சுதந்திரத்துக்கு உத்தரவாதம் அளிக்கும் சட்டப் பிரிவுகளுக்கு முரணாக இருக்கலாம். எனவே, இந்த மசோதாவை மத்திய அரசு முழுமையாக மறு பரிசீலனை செய்ய வேண்டும். இவ்வாறு அதில் கூறுப்பட்டுள்ளது.

## பிகானிர் புஜியா, அப்பளம் ஏற்றுமதி பாதிப்பு

பிகானிர், ஏப்.6-

அமெரிக்கா, ஈரான் இடையிலான போர் காரணமாக ராஜஸ்தானின் பிகானிரில் இருந்து ஏற்றுமதியாகும் புஜியா, அப்பளம் மற்றும் மசாலாப் பொருட்களின் வர்த்தகம் முடங்கியுள்ளது.ராஜஸ்தான் மாநிலம் பிகானிர் கார வகை தின்பண்டங்கள் தொழிலுக்குப் பெயர் பெற்று விளங்குகிறது. இங்கிருந்து வளைகுடா நாடுகள் மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு புஜியா, அப்பளம் ஆகிய தின்பண்டங்கள் மற்றும் மசாலாப் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இந்நிலையில், அமெரிக்கா, ஈரான் இடையிலான போர் காரணமாக சரக்குக் கப்பல் வருகை தாமதம், சரக்குக் கட்டண உயர்வு மற்றும் கன்டெய்னர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் இத்தகைய பொருட்கள் ஏற்றுமதி பாதிக்கப்பட்டுள்ளதாக ஏற்றுமதியாளர்கள் கூறுகின்றனர்.



இதுகுறித்து பிகாராம் குழுமத்தைச் சேர்ந்த புஜியா வர்த்தகர் ஆஷிஷ் அகர்வால் கூறும்போது, ‘‘உற்பத்தி மற்றும் போக்குவரத்துச் செலவுகள் அதிகரித்து வருவது தின்பண்ட தொழில் துறையைப் பாதிக்கிறது. போரினால் சரக்குக் கட்டணங்கள் கடுமையாக உயர்ந்துள்ளன. மூலப்பொருட்களின் விலையும் அதிகரித்து வருகிறது. கடந்த ஒரு மாதத்தில் மட்டும் சமையல் எண்ணெய் விலை சுமார் 20 சதவீதம் உயர்ந்துள்ளது. இது நேரடியாக உற்பத்தியைப் பாதிக்கிறது. முன்பு 30 நாட்களில் சென்றடைய வேண்டிய சரக்குகள், இப்போது போர் காரணமாக பாதுகாப்பான நீண்ட தூரப் பாதைகளில் செல்வதால் 60 நாட்கள் வரை ஆகிறது’’ என்றார்.

மற்றொரு ஏற்றுமதியாளர் ராஜேஷ் ஜிண்டால் கூறும்போது, ‘‘சரக்குகள் வருவதும் போவதும் தாமதமாவதால் வர்த்தகர்களுக்கு நிதி நெருக்கடி அதிகரித்துள்ளது. அரபு நாடுகளில் பிகானிர் தின்பண்டங்களுக்கு நல்ல வரவேற்பு உள்ளது. ஆனால், விநியோகச் சங்கிலி முடங்கியுள்ளதால் நஷ்டம் ஏற்படுகிறது’’ என்றார்.ஏற்றுமதி மட்டுமின்றி, பாமாயில் மற்றும் சோயா பீன்ஸ் போன்ற முக்கிய மூலப்பொருட்களின் இறக்குமதியும் பாதிக்கப்பட்டுள்ளது. பெட்ரோலியப் பொருட்கள் விலை உயர்வால் பேக்கேஜிங் செலவுகள் 30 40 சதவீதம் உயர்ந்துள்ளதாகவும் இது உற்பத்தியாளர்களுக்கு கூடுதல் சுமையை ஏற்படுத்தியுள்ளதாகவும் வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

## ஜாதி, மதங்களுக்கு அப்பாற்பட்ட மக்கள் சேவகர்! எங்கள் ஓட்டு ஐ.பி.ஆருக்கே! ஐ.பெரியசாமிக்கு ஆதரவு அலை

சின்னாளபட்டி, ஏப்.6-

சின்னாளபட்டி மேட்டுப்பட்டி, இலந்தைமரம் நாகம்மன் கோவில் பக்தர்கள் சட்டமன்ற தேர்தலில் எங்கள் ஓட்டு அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களுக்கே உறுதி என்று பேனர் வைத்து, தங்களுடைய ஆதரவை தெரிவித்துள்ளனர். 37 வருடங்களாக மக்கள் சேவகராக வலம்வரும் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் எங்கள் கோவிலுக்கு நிலம் கேட்டவுடன் வாங்கிக் கொடுத்த வள்ளல் அவருக்குத்தான் எங்கள் பகுதி மக்களின் ஆதரவு என்றும், உதயசூரியன் சின்னத்தில் வாக்களிப்போம் என பிளக்ஸ் போர்டு வைத்திருப்பது சின்னாளபட்டி பகுதி மக்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

திண்டுக்கல் மாவட்டம், சின்னாளபட்டி மேட்டுப்பட்டி 9வது வார்டு பகுதியில் இலந்தைமரம் நாகம்மன் கோவில் உள்ளது. சுமார் 250 குடும்பத்தை சேர்ந்த பக்த்ர்களும், அப்பகுதியை சேர்ந்தவர்களும் இலந்தைமரம் நாகம்மனின் பக்தர்களாக உள்ளனர். கடந்த பிப்ரவரி மாதம் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களிடம் தாங்கள் வழிபாடு செய்யும் கோவிலுக்கு சென்றுவர பாதை வசதி வேண்டுமென கோரிக்கை விடுத்தனர். அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களின் கோரிக்கையை ஏற்று இடவசதி ஏற்பாடு செய்து கொடுத்தார். கேட்டவுடன் வரம் கொடுக்கும்தெய்வம் போல் ஜாதி, மத, இன கட்சி வேறுபாடின்றி தங்களுக்கு இடவசதி செய்து கொடுத்த அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் வகையிலும், சட்டமன்ற தேர்தலில் போட்டியிடும் அவரின் கரத்தை பலப்படுத்தும் வகையிலும் தங்கள் பகுதி மக்கள் மற்றும் இலந்தைமரம் நாகம்மன் கோவில் பக்தர்களின் சார்பாக அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து பிளக்ஸ் போர்டு வைத்துள்ளனர்.




இது குறித்து கோவில் கமிட்டி தலைவர் கே.கோபால் கூறுகையில், தமிழகத்தில் எத்தனையோ அமைச்சர்கள் உள்ளனர். ஆனால் அவர்களில் எங்கள் தொகுதி அமைச்சர் ஐ.பெரியசாமி ஐயா அவர்கள் ஜாதி, மத, இன, கட்சி வேறுபாடின்றி அனைத்து சமுதாய மக்களுக்கும் நன்மைகளை செய்து வருகிறார். வரும் கொடுக்கும் தெய்வம்போல்தான் எங்களுக்கு உள்ளார். 2026 சட்டமன்ற தேர்தலில் எங்கள் பகுதி மக்கள் மட்டுமின்றி, இலந்தைமரம் நாகம்மனை வழிபடும் 250 குடும்பங்களின் ஓட்டும் அவருக்கே என்றனர்.

அப்பகுதியைச் சேர்ந்த ரூபினி கூறுகையில் கோவிலுக்கு செல்லும் பாதையை தனியார் வேலி போட்டு அடைத்திருந்தனர். நாங்கள் கோரிக்கை விடுத்தவுடன் கோவிலுக்கே அந்த இடத்தை வாங்கிக் கொடுத்து எங்கள் மனதில் என்றும் நீங்கா இடம் பிடித்துள்ளார். அமோக வெற்றி பெற அவருக்கு நாங்கள் என்றும் உறுதுணையாக இருப்போம் என்றார். அப்பகுதியைச் சேர்ந்த கதிரேசன் கூறுகையில், 2026 சட்டமன்ற தேர்தலில் எங்கள் பகுதி மக்களின் ஓட்டு மட்டுமின்றி எங்களுடைய உறவினர்களின் ஓட்டுக்களையும் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களுக்கு கிடைக்க அயராது உழைப்போம் என்றார். இதுபோல அப்பகுதி மக்களின் ஒட்டுமொத்த ஆதரவும் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களுக்கே என்றது, நெகிழச்செய்தது.



# தென்னகத்தின் ஜாலியன் வாலாபாக் பெருங்காமநல்லூர் தியாகிகளுக்கு 106வது வீரவணக்க நாள் மரியாதை

மதுரை ஏப்.6-

ஆங்கிலேய அரசின் கொடுங்கோல் "கைரேகை சட்டத்தை" எதிர்த்துப் போராடி, தங்கள் இன்னுயிரைத் தியாகம் செய்த பெருங்காமநல்லூர் தியாகிகளின் 106 வது நினைவு தினம் உசிலம்பட்டி அருகே உள்ள பெருங்காமநல்லூரில் உணர்ச்சிப்பூர்வமாக அனுசரிக்கப்பட்டது.

*வரலாற்றுப் பின்னணி:* தென்னகத்தின் ஜாலியன் வாலாபாக்

ஆங்கிலேயர்கள் கொண்டு வந்த மனிதத்தன்மையற்ற கைரேகை சட்டத்தை எதிர்த்து, மாயக்காள் உள்ளிட்ட வீரம் செறிந்த மக்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். 1920ம் ஆண்டு, ஆத்திரமடைந்த ஆங்கிலேயப் படைகள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் பலர் வீரமரணமடைந்தனர். இவர்களின் நினைவாக ஆண்டுதோறும் ஏப்ரல் 3ம் தேதி வீரவணக்க நாள் கடைபிடிக்கப்படுகிறது.

பெருங்காமநல்லூரில் உள்ள தியாகிகள் நினைவு மணிமண்டபத்தில், பிரசிடென்சி சர்வீஸ் கிளப் சார்பில் அதன் முக்கிய நிர்வாகிகள் நேரில் சென்று மலர் வளையம் வைத்து வீரவணக்கம் செலுத்தினர்.

கலந்துகொண்ட முக்கிய நிர்வாகிகள்: தலைவர்: உதயம் ராஜேந்திரன், செயலாளர்: லட்சுமணன், பொருளாளர்: ராஜேந்திரன், துணைச் செயலாளர்: மதிவாணன். மேலும், திண்டுக்கல் அமல்ராஜ், வல்லத்தரசு, ஆடிட் செல்வராஜ், அமர் மகேந்திரன், விஸ்வநாதன், பேராசிரியர் தனுஷ்கொடி, திருப்பரங்குன்றம் பாண்டி, ராஜவடிவு, கம்பவர்மா, சோழத்தேவர், மாயன் மற்றும் பிரமலைக் கள்ளர் சமூக சேவையில் ஆர்வம் கொண்ட சின்னன், ஜெயராஜ், திருப்பதி உள்ளிட்ட திரளானோர் கலந்து கொண்டு தியாகிகளின் வீரத்தைப் போற்றினர்.



■ தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் ராமராஜன் தவெக சார்பில், வேட்பாளர் ராமராஜன், விசில் சின்னத்தில் வாக்களித்து வெற்றி பெற செய்யுமாறு பிரச்சாரம் செய்தார்.சங்கரன்கோவில் கோட்டாட்சியர் அலுவலகத்தில் ஆ.அனிதா அவர்களிடம் த.வெ.க வேட்பாளர் ராமராஜன் வேட்பு மனு தாக்கல் செய்தார். மாவட்ட இணைச்செயலாளர் சூர்யா, நகரச் செயலாளர் சரவணன், ஒன்றிய செயலாளர் கனகராஜ், த.வெ.க மாவட்ட செயற்குழு உறுப்பினர் தங்க மாரியப்பன் ஆகியோர் உடன் இருந்தனர்.



■ தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026 கான வேட்பு மனு தாக்கல் கோட்டாட்சியர் அலுவலகத்தில் அதிமுக தொகுதி வேட்பாளர் திலீபன் ஜெய்சங்கர், கோட்டாட்சியர் ஆ.அனிதா அவர்களிடம் வேட்பு மனு செய்தார். முன்னாள் நகர் மன்ற சேர்மன் ராஜி என்ற கண்ணன், தொகுதி பொறுப்பாளர் சின்னத்துரை, பாரதிய ஜனதா துணைத்தலைவர் ராஜலஷ்மி, குருவி குளம் தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர் டி.பாண்டியராஜ் மற்றும் கழக நிர்வாகிகள் தொண்டர்கள் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



# "மக்களுடன் ஒரு சந்திப்பு!" - 4வது வார்டு பகுதிகளில் பாச மழையில் நனைந்த உடுமலை கே. ராதாகிருஷ்ணன்

உடுமலைப்பேட்டை ஏப்.6-

திருப்பூர் மாவட்டம் உடுமலைப்பேட்டை சட்டமன்றத் தொகுதியின் அதிமுக வேட்பாளர் திரு. உடுமலை கே. ராதாகிருஷ்ணன், உடுமலை நகராட்சிக்குட்பட்ட 4வது வார்டு பகுதிகளில் இரட்டை இலை சின்னத்திற்குத் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

4 வது வார்டு பகுதிகளில் வீடு வீடாகச் சென்ற வேட்பாளர், பொதுமக்களிடம் தங்களது சாதனைகளை விளக்கி இரட்டை இலை சின்னத்திற்கு வாக்களிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

நகரக் கழகச் செயலாளர் ஹக்கீம், அவைத் தலைவர் சாமி (எ) சிவராஜ், மாவட்ட இணைச் செயலாளர் சாஸ்திரி சீனிவாசன், நகரத் துணைச் செயலாளர் ஆறுமுகம், வக்கீல் மனோகர் மற்றும் வார்டு நிர்வாகிகள் ரவி, பழனிச்சாமி, பொறுப்பாளர் பாண்டியன் உள்ளிட்ட அதிமுக நிர்வாகிகள் திரளாகப் பங்கேற்றனர். பாஜக சார்பில் மண்டலத் தலைவர் பாலகுரு, சி.ஆர் (எ) சின்ராஜ், கலா, எஸ்.எம். நாகராஜ், ஐயப்பன் உள்ளிட்ட பாஜக நிர்வாகிகள் மற்றும் கூட்டணி கட்சித் தொண்டர்கள் உற்சாகத்துடன் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்.

இந்நிகழ்வில் மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் பி. செல்வராஜ், விருகல்பட்டி பிரகாஷ், ருத்ரேஸ்வரன், வக்கீல் கண்ணன் உள்ளிட்ட சார்பு அணி நிர்வாகிகள் மற்றும் ஏராளமான தொண்டர்கள் கலந்துகொண்டு தேர்தல் களத்தை அதிரச் செய்தனர்.



# பார்வர்டு பிளாக் வேட்பாளருக்கு ஆதரவாக முக்குலத்தோர் சங்கங்கள், பாமக நிர்வாகிகள் அணிவகுப்பு

திருப்பூர் ஏப். 6-

திருப்பூர் தெற்கு சட்டமன்றத் தொகுதியில், அனைத்திந்திய புரட்சித் தலைவர் மக்கள் முன்னேற்ற கழகக் கூட்டணியின் சார்பில் அகில இந்திய பார்வர்டு பிளாக் வேட்பாளராகப் போட்டியிடும் தேளி கே. காளிமுத்து தேவர் அதிகாரப்பூர்வமாக வேட்புமனுத் தாக்கல் செய்தார்.அகில இந்திய பார்வர்டு பிளாக் தேசியச் செயலாளர் ஜெயராமன், மத்திய குழு உறுப்பினர் ராஜசேகர், தொழிற்சங்க மாநிலத் தலைவர் நல்லமுத்து ஆகியோர் உடனிருந்தனர். கூட்டணி பலம்: அனைத்திந்திய புரட்சித் தலைவர் மக்கள் முன்னேற்ற கழகப் பகுதிச் செயலாளர் சரவணகுமார், பசும்பொன் தேசியக் கழக முருகன், முக்குலத்தோர் தேசியக் கழக எஸ்.பி. ராஜா, தேசிய முக்குலத்தோர் கழகத் தலைவர் கே.டி. சுரேஷ், பசும்பொன் பக்தர்கள் பேரவை ராயல் லட்சுமணன் ஆகியோர் பங்கேற்றனர். பாமக ஆதரவு: பாட்டாளி மக்கள் கட்சி (ராமதாஸ் அய்யா அணி) சார்பில் தெற்கு மாநகரச் செயலாளர் தங்கராஜ், மாவட்டத் துணைச் செயலாளர் ஆனந்தகுமார் மற்றும் மாநிலப் பொதுக்குழு உறுப்பினர் ரமேஷ் ஆகியோர் கலந்து கொண்டு ஆதரவு தெரிவித்தனர்.*தொண்டர்கள் உற்சாகம்:*

மாவட்டத் தலைவர் தாமோதரன் தலைமையில் தனசேகர், சுப்பையா, செல்வம் உள்ளிட்ட ஏராளமான மாவட்ட மற்றும் மாநில நிர்வாகிகள் திரளாகக் கலந்து கொண்டு வேட்பாளருக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர்.

# "வாக்களிப்பதன் அவசியம்: மதுரை ஆட்சியரின் முன்னெடுப்பில் புதுமையான விழிப்புணர்வு

மதுரை ஏப். 6-

தமிழக சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு, மதுரை மாவட்டத்தில் 100% வாக்குப்பதிவை உறுதி செய்யும் வகையில் மாவட்ட நிர்வாகம் சார்பில் பல்வேறு புதுமையான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.



மதுரை ஆயுதப்படை பயிற்சி மைதானத்தில் வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டப் பணிகள் துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் என சுமார் 1,000 பேர் ஒன்றிணைந்து பங்கேற்றனர். தேர்தலில் இளைஞர்கள், பெண்கள், முதியவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் என அனைத்துத் தரப்பினரும் ஒரு வாக்கு கூட வீணாகாமல் 100% ஜனநாயகக் கடமையை ஆற்ற வேண்டியதன் அவசியம் குறித்து எடுத்துரைக்கப்பட்டது.



# "மீண்டும் சர்க்கரை ஆலை இயக்கப்படும்" அலங்காநல்லூர் அதிமுக வேட்பாளர் வாக்குறுதி

அலங்காநல்லூர் ஏப். 6-

மதுரை மாவட்டம் சோழவந்தான் சட்டமன்றத் தொகுதி அதிமுக வேட்பாளர் மாணிக்கம், அலங்காநல்லூர் பேரூராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டு பகுதிகளிலும் இரட்டை இலை சின்னத்திற்குத் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். அதிமுக ஒன்றியச் செயலாளர் ரவிச்சந்திரன் தலைமையிலும், நகரச் செயலாளர் அழகுராஜ் முன்னிலையிலும் கட்சி நிர்வாகிகள் மேளதாளங்கள் முழங்க, பட்டாசுகள் வெடித்து உற்சாக வரவேற்பு அளித்தனர்.*அதிரடி வாக்குறுதிகள்:* வீதி வீதியாகச் சென்று துண்டுப் பிரசுரங்களை வழங்கிய வேட்பாளர் மாணிக்கம், "அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு தடையின்றித் தொடர்ந்து நடைபெற வழிவகை செய்யப்படும், மூடப்பட்ட சர்க்கரை ஆலை மீண்டும் இயக்கப்படும், குடிநீர் தட்டுப்பாடு மற்றும் சாக்கடை வசதிகள் போர்க்கால அடிப்படையில் சரி செய்யப்படும்" என உறுதி அளித்தார்.

இந்நிகழ்வில் மாநில அம்மா பேரவை துணைச் செயலாளர் வாடிப்பட்டி ராஜேஷ்கண்ணா, ஒன்றியச் செயலாளர்கள் காளிதாஸ், அரியூர் ராதாகிருஷ்ணன், கொரியர் கணேசன், பாஜக தேசிய பொதுக்குழு உறுப்பினர் பழனிவேல்சாமி, அமமுக ஒன்றியச் செயலாளர்கள் வழக்கறிஞர் கோடீஸ்வரன், சம்பக்குளம் ரகு உள்ளிட்ட அதிமுக, பாஜக மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் திரளாகக் கலந்து கொண்டனர்.



■ திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் வட்டம், வில்பட்டி ஊராட்சியில், உப்புப்பாறை மெத்து கிராமத்தில் பங்குனி உத்திர விழாவானது வெகு விமர்சயாக கொண்டாடப்பட்டது. விழாவில் மேள தாளங்கள் முழங்க பறவை காவடி, வேல் பூட்டுதல், காவடி ஊர்வலம் என விழா களை கட்டியது. ஊர்வலமானது போதி ஜெண்டோ அருகில் உள்ள ஆற்றில் இருந்து அருள் மிகு சக்தி விநாயகர், அருள் மிகு பாலமுருகன் திருக்கோவிலுக்கு சென்று பொங்கல் வைத்து சிறப்பு பூஜையானது நடைபெற்றது. பின்னர் பக்தர்களுக்கு சிறப்பான அன்னதானம் வழங்கப்பட்டது. சுற்று வட்டார கிராமங்களில் இருந்து திராளான பொதுமக்கள் பக்தர்கள கலந்துகொண்டு விழாவை சிறப்பித்தனர்.






















SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000